தமிழ்ப் பெண்கள் அமைப்பு - யேர்மனி

**Tamilische Frauen Organisation e.V.**

Tamilische Frauen Organisation e.V., Postfach 311238, 70471 Stuttgart

**Tamilische Frauen Organisation e.V.**
Postfach 311238
70471 Stuttgart

info@tfogermany.com
www.tfogermany.com

VR 510619

# விடுதலைக்காந்தள் - 2024
## விருதுக்கான மாபெரும் போட்டி

### தமிழ்ப் பெண்கள் அமைப்பு நடத்தும் விடுதலைக்காந்தள் விருதுக்கான விடுதலைப்பாடற்போட்டி, விடுதலை நடனப்போட்டி, விடுதலை இசைப்போட்டி.

யேர்மனியில் நடனக்கலைஞர்கள், பாடற்கலைஞர்கள், இசைக்கலைஞர்களின் ஆர்வத்துக்குக் களம் அமைத்துக்கொடுத்து, இக்கலைஞர்களது திறமைகளை வெளிக்கொண்டுவரும் நோக்கில் மாபெரும் **விடுதலை நடனம், வாத்திய இசை, பாடற்போட்டிகளை** நடத்தவுள்ளோம்.

விடுலை நடனப்போட்டி 2024 ( தாயகவிடுதலைப் பாடலுக்கான நடனப்போட்டி )

விடுலைப் பாடற்போட்டி 2024 ( தாயகவிடுதலைப்பாடற்போட்டி )

விடுதலை இசைப்போட்டி 2024 ( தாயகவிடுதலைப்பாடலை முழுமையாக இசைக்கருவியில் இசைக்கும் போட்டி )

யேர்மனியில் தமிழாலயங்கள், தமிழ்க்கலைக்கூடங்கள் போன்றவற்றில் நடனக்கலை, இசைக்கலை முறைப்படி பயிலும் மாணவர்களும் மற்றும் பயிலாத மாணவர்களும் இசை, நடனம் முறைப்படி பயிலாத தன்னார்வலர்களும் நடனக்கலை, இசைக்கலை பயிற்றுவிக்கும் கலைநிறுவனங்களும் ஆசிரியர்களும் எங்களின் இம்முயற்சிக்கு உங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதுடன் நீங்களும் பங்குபற்றி பயன்பெறுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

அனைத்துக்கலைஞர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க விடுதலைக்காந்தள் நிகழ்வை யேர்மனியில் கற்றிங்கன் நகரத்தில் (09.11.2024) நடத்தவுள்ளோம்.

**போட்டி நடைபெறும் முகவரி:**
**Gesamtschule Hattingen , Marxstrsse 99 , 45527 Hattingen.**

## நடனப்பிரிவு

**பாலர் பிரிவு, ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு** ஆகிய பிரிவுகளைக் குழுநடனப்பிரிவாக வகுத்துள்ளோம். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப்பெறும் நடனப்போட்டிக் குழுவினருக்குச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி மதிப்பளிக்கப்படும்.

**மேற்பிரிவு, அதிமேற்பிரிவு** ஆகிய பிரிவுகளைத் தனிநடனப்போட்டிப் பிரிவாக வகுத்துள்ளோம். இப்பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் **முதலாம்** இடத்தைப்பெறும் நடனப்போட்டியாளருக்கு **விடுதலைக்காந்தள்** எனும் மாபெரும் விருதுவழங்கி மதிப்பளிக்கப்படும். இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெறும் நடனப்போட்டியாளர்ளுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி மதிப்பளிக்கப்படும்.

## வாத்திய இசைக்கருவிப்பிரிவு

**பாலர் பிரிவு, ஆரம்பப்பிரிவு கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு** ஆகிய தனியிசைக்கருவிப் போட்டிப் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் **முதலாம்** இடத்தைப்பெறும் போட்டியாளருக்கு **விடுதலைக்காந்தள்** எனும் மாபெரும் விருதுவழங்கி மதிப்பளிக்கப்படும். இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெறும் போட்டியாளர்களுகுச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி மதிப்பளிக்கப்படும்.
குழு வாத்திய இசைக்கருவிப் போட்டியாளருக்கு வயதெல்லை வகுக்கப்படவில்லை. முதல் மூன்று இடங்களைப்பெறும் குழுவினருக்குச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி மதிப்பளிக்கப்படும்.

## பாடற்பிரிவு

**பாலர் பிரிவு, ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு** ஆகிய பிரிவுகளைத் தனிப்பாடற்போட்டிப் பிரிவாக வகுத்துள்ளோம்.

ஒவ்வொரு பிரிவிலும் **முதலாம்** இடத்தைப்பெறும் போட்டியாளருக்கு **விடுதலைக்காந்தள்** எனும் மாபெரும் விருதுவழங்கி மதிப்பளிக்கப்படும். இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி மதிப்பளிக்கப்படும்.

## விடுதலைக்காந்தள் போட்டியின் விதிகள்

| பிரிவு | வயதெல்லை | |
|---|---|---|
| பாலர்பிரிவு | 5 - 7 | 01.01.2017 – 01.01.2019 |
| ஆரம்பப்பிரிவு | 8 - 10 | 01.01.2014 – 01.01.2016 |
| கீழ்ப்பிரிவு | 11 - 13 | 01.01.2011 – 01.01.2013 |
| மத்திய பிரிவு | 14 - 16 | 01.01.2008 – 01.01.2010 |
| மேற்பிரிவு | 17 - 20 | 01.01.2004 – 01.01.2007 |
| அதிமேற்பிரிவு | 21 வயதுக்கு மேற்பட்டோர் | 31.12..2003 க்கு மேல் |

எம்மால் தரப்படும் http://eelasongs.com எனும் இணையத்தளத்தில் மட்டுமே தாயகவிடுதலை எழுச்சிப்பாடல்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

**விடுதலைக்காந்தள்** போட்டி நிகழ்வில் பங்குபற்றும் போட்டியாளர்கள் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**விடுதலைக்காந்தள்** போட்டி நிகழ்வில் பங்குபற்றும் போட்டியாளர்கள், ஆசிரியர்கள், கலைநிறுவனங்கள், தன்னார்வலர்குழுவினர் தம் பெயர்களை விண்ணப்படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

**விடுதலைக்காந்தள்** விருதுப்போட்டிகளில் குறைந்த வயதுப்பிரிவுகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கூடிய வயதுப்பிரிவுகளில் பங்குபற்றலாம். ஆனால், கூடிய வயதுப்போட்டியாளர்கள் குறைந்த வயதுப்போட்டிகளில் பங்குபற்றமுடியாது.

**விடுதலைக்காந்தள்** போட்டி நிகழ்வில் தேவை ஏற்படின் உங்கள் வயதுகளை உறுதிப்படுத்தும் அத்தாட்சிப்பத்திரங்களை மண்டபத்தில் சமர்பிக்க வேண்டும்.

வாத்திய இசைக்கலைஞர்கள் இசைக்கருவிகளின் ஊடாக மட்டுமே தாயகவிடுதலை எழுச்சிப்பாடலை **முழுமையாக** இசைத்தல் வேண்டும்.

நடனக்கலைஞர்கள் தாயகவிடுதலை எழுச்சிப்பாடல்களுக்கு **முழுமையாக** நடனம் ஆடுதல் வேண்டும்.

**விடுதலைக்காந்தள்** பாடற்போட்டியாளர்கள் தாயகவிடுதலைப் பாடலை முழுமையாகப் பாடுதல் வேண்டும். பாடற்போட்டி நிகழ்வில் பங்குபற்றும் போட்டியாளர்கள் பின்னணி இசையில்(karaoke) தடங்கல் ஏற்படாமலிருக்க **இரண்டு**USPSTICK இல் கொண்டுவர வேண்டும்.

விடுதலைக்காந்தள் குழு நடனப்போட்டியில் ஒரு குழுவில் மூன்று தொடக்கம் ஆறு போட்டியாளர்கள் பங்குபற்றலாம். குழு இசைப்போட்டியில் இரண்டும் இரண்டுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றலாம்.

**விடுதலைக்காந்தள்** போட்டிநிகழ்வில் பங்குபற்றும் நடனக்கலைஞர்கள் மண்டபத்தில் பாடல் தடங்கல் ஏற்படாமலிருக்க பாடல்களை **இரண்டு**USPSTICK இல் கொண்டுவரவேண்டும்.

## கட்டணம்

| | பாலர் பிரிவு | ஆரம்பப் பிரிவு | கீழ்ப்பிரிவு | மத்திய பிரிவு | மேற்பிரிவு | அதிமேற்பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| குழுநடனப்போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு போட்டியாளர் | 20 € | 20 € | 20€ | 20 € | 20 € | 20 € |
| தனிநடனப்போட்டி | | | | | 30 € | 30€ |
| தனிப்பாடற்போட்டி | 15 € | 15 € | 25€ | 25 € | 30 € | 30€ |
| தனிவாத்திய இசைப் போட்டி | 15€ | 15 € | 25€ | 25€ | 30 € | 30€ |
| குழுவாத்திய இசைப்போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு போட்டியாளர் | 20 € | | | | | |

விண்ணபப்பப்படிவத்தை நிரப்பி **19.09.2024** க்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். **19.09.2024** க்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**
Saravanamuthu Sivaramathasan
Windhuk str 8
42389 Wuppertal .

**தகவல் தொடர்புகளுக்கு** 0171 - 501 50 87 / 0176-23986610
பாடல் தெரிவு தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0151- 20908830

**தமிழ்ப் பெண்கள் அமைப்பு – யேர்மனி**

# தமிழ்ப் பெண்கள் அமைப்பு - யேர்மனி

## விடுதலைக்காந்தள் 2024

### தனிப்போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| முழுப்பெயர் | |
| பிறந்தநாள் | |
| முகவரி | |
| பங்குபற்றும் பிரிவு | |
| பங்குபற்றும் போட்டி | நடனம் ☐ வாத்திய இசை ☐ பாடல் ☐ |
| தொலைபேசி | |
| ஆசிரியர் / பயிலும் நிறுவனங்கள் / தன்னார்வலர் /குழுவின் பொறுப்பாளர்: | |

விடுதலைக்காந்தள் 2024 போட்டியின் அனைத்து விதிமுறைகளையும் ஏற்றுக்கொண்டு போட்டியில் பங்குபற்ற விண்ணப்பிக்கின்றேன்.

போட்டியாளர் கையொப்பம்: ______________________________ .

**தகவல் தொடர்புகளுக்கு** 0171 - 501 50 87 / 0176-23986610
பாடல் தெரிவு தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0151- 20908830

**தமிழ்ப் பெண்கள் அமைப்பு – யேர்மனி**

# தமிழ்ப் பெண்கள் அமைப்பு - யேர்மனி
## விடுதலைக்காந்தள் 2024

### குழுப்போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவம்

நடனஆசிரியர் / கலைநிறுவனம் / தன்னார்வலர்குழுவின் பெயர் விபரங்கள் ________________________________

பிரிவு: ______________________ பங்குபற்றும் போட்டி: நடனம் ☐ வாத்திய இசை ☐

| | |
|---|---|
| முகவரி | |
| தொலைபேசி | |

குழுவின் விபரங்கள்:

| இல. | முழுப்பெயர் | பிறந்தநாள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

விடுதலைக்காந்தள் 2024 போட்டியின் அனைத்து விதிமுறைகளையும் ஏற்றுக்கொண்டு போட்டியில் பங்குபற்ற விண்ணப்பிக்கின்றோம்.

தொடர்பாளர் கையொப்பம்: ________________________________

**தகவல் தொடர்புகளுக்கு** 0171 - 501 50 87 / 0176-23986610

பாடல் தெரிவு தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0151- 20908830

**தமிழ்ப் பெண்கள் அமைப்பு – யேர்மனி**